# கள்ளப்போதகர்களை எதிர்கொள்ளுதல்



பாடம் 12 செப்டம்பர் 19, 2026


"எங்களுடைய போராயுதங்கள்
மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல்,
அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத்
தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது."
(2 கொரிந்தியர் 10:4)

அனைத்து சபைகளைப் பற்றியும் தொடர்ந்து தகவல்களை அறிந்துகொள்வதை தன் குறிக்கோளாக பவுல் வைத்திருந்தார். ஏன்? அவர்களுக்கு ஏதேனும் உதவி, நேரில் சந்திப்பு, ஆறுதல் அல்லது ஊக்கமளிக்கும் வார்த்தை தேவைப்படுகிறதா என்பதை அறிந்துகொள்வதாகவே. (2 கொரி. 11:28).



விசுவாசிகளைத் தடுமாறச் செய்யும் கள்ளப் போதகர்களை பற்றி அவருக்கு சில சமயங்களில் தெரியவரும். அப்படிப்பட்ட நேரங்களில், அந்த அப்போஸ்தலர் கடும் கோபமடைந்தார்(2 கொரி. 11:29).

கொரிந்தியர்களுக்கு எழுதிய தனது இரண்டாவது கடிதத்தின் இறுதியில், பவுல் அந்த கள்ளப் போதகர்கள் குறித்த பிரச்சனையை குறிப்பிடுகிறார். அவர்களை நாம் எவ்வாறு அடையாளம் காண்பது? இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் எவ்வாறு எதிர்த்து போரிடுவது? அவர்களை நாம் எவ்வாறு வெல்வது?



**ஆவிக்குரிய போராட்டம்:**

- தாக்குதலுக்கான ஆயுதங்கள் (2 கொரிந்தியர் 10:1-11)
- சரியான தற்காப்பு (2 கொரிந்தியர் 10:12-18)

**கள்ளப்போதகர்களை எதிர்கொள்ளுதல்:**

- அப்போஸ்தலர்களாக வேடமிட்ட ஏமாற்றுக்காரர்கள் (2 கொரி 11:1-15)
- பவுலும் கள்ளப்போதகர்களும் (2 கொரிந்தியர் 11:16-31)
- சுயபரிசோதனையும் வெற்றியும் (2 கொரிந்தியர் 12:14-13:10)

# ஆவிக்குரிய போராட்டம்





# தாக்குதலுக்கான ஆயுதங்கள்



"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது." (2 கொரிந்தியர் 10:4)

பவுல் தனது கடிதங்களில் கடினமாக பேசினாலும், நேரில் சந்திக்கும்போது கோழைத்தனமாகவும் தடுமாற்றத்துடனும் நடந்துகொள்பவர் என்று குற்றம் சாட்டப்பட்டார் (2 கொரி. 10:10).

இந்த வாதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, நேரில் சந்திக்கும் போதும் கடிதத்தில் வெளிப்படுத்துவதைப் போலவே கடுமையாக நடந்து கொள்ள தம்மால் முடியும் என்பதை பவுல் தெளிவாக குறிப்பிட்டார், ஆனால், "மாம்சத்திற்குரிய ஆயுதங்களை" (அதிகாரத் தோரணை, உடல் ரீதியான தண்டனை அல்லது சுய-பெருமை பாராட்டுதல்) அவர் ஒரு போதும் பயன்படுத்த மாட்டார் என்றும், மாறாக "தேவனுடைய வல்லமையுள்ள ஆயுதங்களை" மட்டுமே பயன்படுத்துவார் என்றும் அவர் கூறினார் (2 கொரி. 10:2-4).



இந்த "ஆயுதங்களில்" கிறிஸ்துவின் மனத்தாழ்மையும் சாந்தமுமாய் நடந்துகொள்வது அடங்கும் (மத். 11:29). ஆனால், இயேசுவைப் போல தீமைக்கு எதிராக உறுதியாக நிற்பதும் (மத். 21:12-13), அல்லது தேவைப்படும்போது தெளிவாக பேசுவதும் (மத். 23:23-27) இதில் அடங்கும்.



பவுலுக்கு அந்த அதிகாரம் கிறிஸ்துவால் வழங்கப்பட்டிருந்தது: அதை அவர் எப்போதும் அழிப்பதற்கு அல்ல, கட்டியெழுப்புவதற்கே பயன்படுத்துவார் (2 கொரி. 10:8).

# சரியான தற்காப்பு

"தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்." (2 கொரிந்தியர் 10:18)

தங்களிடமிருந்து கற்க விரும்பிய மாணவர்களிடமிருந்து கிரேக்கத் தத்ததுவஞானிகள் பெருந்தொகையை வசூலித்தனர். மாணவர்களை ஈர்ப்பதற்காக, அவர்கள் தங்கள் அறிவு, சமூக அந்தஸ்து அல்லது தங்களை அறிந்தும் மதித்தும் வந்த முக்கிய நபர்கள் ஆகியவற்றை முன்னிருத்தி பெருமை பேசிக் கொண்டனர். கொரிந்து சபைக்குள் ஊடுருவிய போலிப் போதகர்களும் இதே முறையையே பின்பற்றினர் (2 கொரி. 10:12; 11:19-20).






ஆனால், பவுல் தனது அறிவைப் பகிர்ந்து கொண்டதற்காக கட்டணம் ஏதும் வசூலிக்கவில்லை: பரிந்துரை கடிதங்களை சமர்பிக்கவில்லை: தன்னைப்பற்றி பெருமையாக பேசிக்கொள்ளவும் இல்லை. இதற்காகவே அவர் தாழ்வாக கருதப்பட்டார்! அவர் தன்னை எவ்வாறு தற்காத்துக் கொள்ள முடியும்?


கொரிந்தியர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, அவர்களுக்கு முன்பாக அவர் புகழப்பட வேண்டியிருந்தது போல தெரிகிறது. ஆனால், அவரே தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளக்கூடாது (நீதி. 27:2). எனவே தன்னை புகழும் பொறுப்பை பவுல் தேவனிடமே விட்டுவிட்டார் (2 கொரி. 10:18).

நாம் பெருமைபடவோ அல்லது நம்மை நாமே பாராட்டிக் கொள்ளவோ ஏதேனும் ஒன்று இருக்குமானால், அது தேவனை அறிந்துகொள்வதும் அவருக்கு கீழ்ப்படிவதுமே(எரே. 9:24; 2கொரி. 10:17).









# கள்ளப் போதகர்களை எதிர்கொள்ளுதல்

# அப்போஸ்தலர்களாக வேடமிட்ட ஏமாற்றுக்காரர்கள்

"அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள்.(2 கொரிந்தியர்கள் 11:13)





கிறிஸ்துவிடம் ஒரு தூய சபையை கொண்டுவர பவுல் விரும்புகிறார்(2 கொரி. 11:2). ஆனால் ஏவாளைப் போலவே சபையும் ஏமாற்றப்பட்டு, இயேசுவின் மணவாட்டியாக இருக்கும் நிலையை இழந்துவிடும் அபாயத்தில் இருந்தது (2 கொரி. 11:3).

உண்மையான ஆபத்து என்னவாக இருந்தது? இயேசுவின் "சிறந்த அப்போஸ்தலர்கள்" என்று தங்களை புகழ்ந்து கொண்ட யூதர்கள், "வேறொரு ஆவி" மற்றும் "வேறொரு நற்செய்தி" ஆகியவற்றை போதிப்பதற்காக கொரிந்துவுக்கு வந்திருந்தனர்(2 கொரி. 11:4-5; கலா. 1:8).






ஒருவர் இயேசுவை பிரசங்கிக்கிறார் என்பதாலேயே, அவர் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையான இயேசுவை நமக்கு காட்டுகிறார் என்று அர்த்தமல்ல. அவர்களுடைய வார்த்தைகள் அற்புதமானவையாக இருக்கலாம்: ஆனால் சாத்தானுக்கேகூட அற்புதமாக பேசவும், தன்னை "ஒளியின் தூதனாக" வெளிப்படுத்திக் கொள்ளவும் தெரியும் (2 கொரிந்தியர் 11:14).

உண்மையான போதகர்கள் தங்கள் செயல்கள் மற்றும் வார்த்தைகள் மூலம் "கிறிஸ்துவின் சத்தியத்தை" போதிக்கிறார்கள் (2 கொரி. 11:9-10). ஆனால் பக்திமான்கள் போல வேடமணிந்த கள்ளப் போதகர்கள், அப்போஸ்தலர்களாக வேடமிட்டு ஏமாற்றும் ஊழியர்களாய் இருக்கிறார்கள் (2 கொரி. 11:13-15).

# பவுலும் கள்ளப்போதகர்களும்

"அவர்கள் எபிரெயரா? நானும் எபிரெயன்; அவர்கள் இஸ்ரவேலரா? நானும் இஸ்ரவேலன்; அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரா? நானும் ஆபிராகாமின் சந்ததியான்." (2 கொரிந்தியர் 11:22)



பவுலுக்கும் போலி போதகர்களுக்கும் இடையே என்ன ஒற்றுமைகள் இருந்தன? அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய யூதர்களாக இருந்தனர் (2 கொரி. 11:22).

அவர்களுக்கு இடையே இருந்த வேறுபாடுகள் என்ன? இங்கிருந்து தான் பவுலின் பைத்தியகாரத்தனம் தொடங்குகிறது: "அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? (புத்தியீனமாய்ப் பேசுகிறேன்;) நான் அதிகம்;" (2 கொரி. 11:23). கிறிஸ்துவுக்காக துன்பப்பட்டதாக மற்றவர்கள் பெருமை பாராட்டினால், பவுல் அதைவிட அதிக தகுதியுடையவராக இருந்தார்: அவர் சாட்டையடிபட்டார்; சிறையிலடிக்கப்பட்டார்; மரண அச்சுறுத்தலுக்குள்ளானார்; கல்லெறியப்பட்டார்; கப்பல் விபக்குள்ளானார்; பலவிதமான ஆபத்துக்களை எதிர்கொண்டார்; பசி, தாகம், குளிரின் கொடுமை மற்றும் போதிய உடையின்மை ஆகியவற்றை அனுபவித்தார்; மேலும் திருச்சபைகள் குறித்த கவலையை எப்போதும் கொண்டிருந்தார்(2 கொரி. 11:23பி-29).

இத்துடன் பவுலின் அந்த "பைத்திகாரத்தனம்" முடிவடைகிறது. கிறிஸ்துவுக்காக தான் செய்தவற்றை குறித்து பெருமை பேச விரும்புவது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த அவர் விரும்பவில்லை. கிறிஸ்து தனக்காக செய்தவற்றை குறித்தே அவர் உண்மையாக பெருமை பாராட்டினார் (அல்லது மேன்மை பாராட்டினார்). அவருடைய உண்மையான பலம் அவருடைய பலவீனத்திலேயே இருந்தது: அதுவே அவரை இயேசுவை முழுமையாக சார்ந்திருக்க செய்தது (2 கொரி. 11:30-31; 12:6-10).




# சுயப்பரிசோதனையும் வெற்றியும்

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்." (2 கொரிந்தியர் 13:5)

பவுல் கொரிந்துவுக்கு செல்லவிருந்த நேரம் நெருங்கி கொண்டிருந்தது. அங்கே அவர் எதைக் காண்பார், அதற்கேற்ப அவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? (2 கொரி. 13:1-2).





மனம் வருந்தியவர்களை மீட்டெடுக்கவும், பிடிவாதமாக இருப்பவர்களைத் தண்டிக்கவும், திருச்சபை ஒழுங்கு நடவடிக்கையைத் தீவிரமாக மேற்கொள்ள தயாராக இருந்தார்.

அங்கு சென்றடையும் போது, அவர்கள் சச்சரவுகளிலும் பலவிதமான பாவங்களிலும் ஈடுப்பட்டிருப்பதை காண நேரிடுமோ என்று அவர் அஞ்சினார். மனம் மாறாத பாவிகளுக்காக கண்ணீர் சிந்த வேண்டிய நிலை ஏற்படுமோ என்றும் அவர் பயந்தார் (2 கொரி. 12:20-21).



ஆகவே, அந்த காலம் வருவதற்கு முன்பாக, கொரிந்தியர்கள் தங்களை பற்றி சிந்தித்து தங்களை சோதித்து பார்க்க வேண்டும் (2 கொரி. 13:5).

பவுலை பொறுத்தவரை, அவர்கள் தீமை செய்வதை நிறுத்திவிட்டு நன்மை செய்யவும், முழுமையடையவும் அவர் அவர்களுக்காக ஜெபித்தார்(2 கொரி. 13:7-9).

“கள்ளப் போதகர்களின் செல்வாக்கிலிருந்தும், இருளின் ஆவிகளின் வஞ்சக வல்லமையிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ள, தேவனுடைய மக்கள் வேதவாக்கியங்களை நோக்கி வழிநடத்தப்படுகிறார்கள். மனிதர்கள் வேதாகமத்தைப் பற்றிய அறிவைப் பெறுவதைத் தடுக்க சாத்தான் சாத்தியமான எல்லா தந்திரங்களையும் கையாள்கிறான்; ஏனெனில் அதன் தெளிவான வார்த்தைகள் அவனுடைய வஞ்சகங்களை வெளிப்படுத்துகின்றன. தேவனுடைய கிரியையின் ஒவ்வொரு எழுப்புதலின்போதும், தீமையின் அதிபதி இன்னும் தீவிரமான செயல்பாட்டிற்குத் தூண்டப்படுகிறான்; கிறிஸ்துவுக்கும் அவருடைய சீடர்களுக்கும் எதிரான ஒரு இறுதிப் போராட்டத்திற்காக அவன் இப்போது தனது உச்சகட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். [...] கள்ளத்தனமானது உண்மையானதைப் போலவே மிகவும் ஒத்திருக்கும், அதனால் பரிசுத்த வேதவாக்கியங்களைத் தவிர அவற்றுக்கிடையே வேறுபடுத்திப் பார்ப்பது சாத்தியமற்றதாகிவிடும். அவற்றின் சாட்சியத்தின் மூலமே ஒவ்வொரு கூற்றும் ஒவ்வொரு அற்புதமும் சோதிக்கப்பட வேண்டும்.”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆன்மீக போராட்டம், பக். 593)